மகளிர் நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்), தூத்துக்குடி.

முன்னிலை: **திரு. M.P. முருகன், M.A.,L.L.B.,**

அமர்வு நீதிபதி, மகளிர் நீதிமன்றம்.

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23ம் நாள் செவ்வாய் கிழமை

**<u>குற்ற பல்வகை மனு எண். 3138/2026</u>**

**<u>உள்</u>**

**<u>குற்ற பல்வகை மனு எண். 2236/2026</u>**

**<u>உள்</u>**

**<u>அமர்வு வழக்கு எண். 281/2025</u>**

**(CNR.No. TNTT01-004714-2026)**

நாகராஜன் (எ) நாகராஜ் ..... மனுதாரர்/2 வது எதிரி.

/எதிர்/

தமிழக அரசுக்காக,

ஆய்வாளர்,

கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையம்,

தூத்துக்குடி.

குற்ற எண். 249/2025. ..... எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்.

இம்மனு இந்நீதிமன்ற கோப்பில் கடந்த 15.6.2026ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு என்முன்பாக 19.6.2026ம் தேதி இறுதிவிசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/2 வது எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. சுப்பிரமணிய ஆதித்தன் அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் கற்றறிந்த அரசு சிறப்பு குற்றத்துறை வழக்கறிஞர் திருமதி. V. எல்லம்மாள் அவர்கள் ஆஜராகியும், இம்மனு உட்பட அமர்வு வழக்கு எண். 281/2025 வழக்குசார்ந்த சகல ஆவணங்களையும் சீர்தூக்கி பார்த்தும், கற்றறிந்த உபயதரப்பு வழக்கறிஞர்கள் செய்து கொண்ட வாதஉரைகளை கேட்டறிந்தும்,

இதுநாள்வரையில் எனது பரிசீலனையில் இருந்து வந்த இம்மனு மீது இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்.....

**<u>உத்தரவு</u>**

குற்ற பல்வகை மனு எண். 2236/2026 உள் அமர்வு வழக்கு எண். 281/2025 மனுவில் கடந்த 4.5.2026 ம் தேதி விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தளர்வு செய்து உத்தரவிடக் கோரி மனுதாரர்/2 வது எதிரி தரப்பில் பிரிவு 483 பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர்/2 வது எதிரி தரப்பு மனுவின் சுருக்கம்:</u>**

மனுதாரர் இந்நீதிமன்ற கோப்பில் உள்ள பிரிவுகள் 3(5), 296(பி), 109(1), 351(3), 191(2), 332(a), 127(2), 118(2), 61(2). 103(2) BNS மற்றும் பிரிவு 3 தமிழ்நாடு சொத்து (சேதம் மற்றும் அழிம்பு) தடுப்பு சட்டத்தின்படியான அமர்வு வழக்கு எண். 281/2025 வழக்கில் 2 வது எதிரி ஆவார். குற்ற பல்வகை மனு எண். 2236/2026 உள் அமர்வு வழக்கு எண். 281/2025 மனுவில் கடந்த 4.5.2026 ம் தேதி இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவில் பிணையில் வந்த பின்னர் மனுதாரர்/2 வது எதிரி மறுஉத்தரவு பிறப்பிக்கும்வரை இந்நீதிமன்றத்தின் முன்பாக ஒவ்வொரு வாரமும் திங்கள்கிழமை அன்று காலை 10.30 மணிக்கு ஆஜராகி கையொப்பம் செய்ய வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்/2 வது எதிரி கடந்த 6.5.2026 ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பாக பிணையதாரர்களை ஆஜர் செய்து பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். மனுதாரர்/2 வது எதிரி கடந்த 5 வாரங்களாக இந்நீதிமன்றத்தின் முன்பாக ஆஜராகி கையொப்பம் செய்து வருகிறார். மனுதாரர்/2 வது எதிரி தினக்கூலி ஆவார். மனுதாரர்/2 வது எதிரி தலைமறைவாக மாட்டார். அமர்வு வழக்கு எண். 281/2025 வழக்கானது அரசு தரப்பில் இதர சாட்சிகளை விசாரணை செய்வதற்காக நிலுவையில் இருந்து வருகிறது. இந்த மனுவானது நிபந்தனையை தளர்வு செய்யக் கோரி தாக்கல்

செய்யப்பட்டுள்ள முதல் மனுவாகும். எனவே குற்ற பல்வகை மனு எண். 2236/2026 உள் அமர்வு வழக்கு எண். 281/2025 மனுவில் கடந்த 4.5.2026ம் தேதி விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தளர்வு செய்து உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>அரசு தரப்பு ஆட்சேபணையின் சுருக்கம்:</u>**

குற்ற பல்வகை மனு எண். 2236/2026 உள் அமர்வு வழக்கு எண். 281/2025 மனுவில் கடந்த 4.5.2026ம் தேதி இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவில் பிணையில் வந்த பின்னர் மனுதாரர்/2வது எதிரி மறுஉத்தரவு பிறப்பிக்கும்வரை இந்நீதிமன்றத்தின் முன்பாக ஒவ்வொரு வாரமும் திங்கள்கிழமை அன்று காலை 10.30 மணிக்கு ஆஜராகி கையொப்பம் செய்ய வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்/2வது எதிரி கடந்த 11.5.2026ம் தேதி முதல் 15.6.2026ம் தேதி வரை ஒவ்வொரு வாரமும் திங்கள்கிழமை அன்று காலை 10.30 மணிக்கு ஆஜராகி இந்நீதிமன்றத்தில் மொத்தம் ஆறு வாரங்கள் கையொப்பமிட்டுள்ளார். மனுதாரர்/2வது எதிரிக்கு மேற்படி நிபந்தனையை தளர்வு செய்யும்பட்சத்தில் மனுதாரர்/2வது எதிரி மீண்டும் இதுபோன்ற குற்ற செயலில் ஈடுபட வாய்ப்புள்ளது. எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. **<u>தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனை:</u>**

குற்ற பல்வகை மனு எண். 2236/2026 உள் அமர்வு வழக்கு எண். 281/2025 மனுவில் கடந்த 4.5.2026ம் தேதி விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தளர்வு செய்து உத்தரவிடக் கோரி மனுதாரர்/2வது எதிரி தரப்பில் பிரிவு 483 பாரதிய குடிமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமா? இல்லையா? என்பது தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.

5. கற்றறிந்த மனுதாரர்/2வது எதிரி தரப்பு வழக்கறிஞர், கற்றறிந்த அரசு தரப்பு சிறப்பு குற்றத்துறை வழக்கறிஞர் ஆகியோர் செய்து கொண்ட

வாதஉரைகளும், இம்மனு உட்பட அமர்வு வழக்கு எண். 281/2025 வழக்குசார்ந்த சகல ஆவணங்களும் இந்நீதிமன்றத்தால் சீர்தூக்கி பார்க்கப்பட்டது.

6. அமர்வு வழக்கு எண். 281/2025 வழக்கினை பொறுத்து அரசு தரப்பில் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.13 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, ஏனைய சாட்சிகளை விசாரணை செய்வதற்காக வழக்கானது நிலுவையில் இருந்து வருகிறது. மனுதாரர்/2 வது எதிரி கடந்த 3.6.2025 ம் தேதி கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் இருந்து வந்துள்ளார். இந்த நிலையில் குற்ற பல்வகை மனு எண். 2236/2026 உள் அமர்வு வழக்கு எண். 281/2025 மனுவில் கடந்த 4.5.2026 ம் தேதி இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவில் பிணையில் வந்த பின்னர் மனுதாரர்/2 வது எதிரி மறுஉத்தரவு பிறப்பிக்கும்வரை இந்நீதிமன்றத்தின் முன்பாக ஒவ்வொரு வாரமும் திங்கள்கிழமை அன்று காலை 10.30 மணிக்கு ஆஜராகி கையொப்பம் செய்ய வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்/2 வது எதிரி கடந்த 6.5.2026 ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பாக பிணையதாரர்களை ஆஜர் செய்து பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். மனுதாரர்/2 வது எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜராகி கடந்த 11.5.2026 ம் தேதி முதல் 15.6.2026 ம் தேதி வரை மொத்தம் ஆறு வாரங்கள் கையொப்பமிட்டுள்ளார். மனுதாரர்/2 வது எதிரி கிட்டத்தட்ட ஒரு வருடம் காவலில் இருந்து வந்து தற்போது தான் பிணையில் இருந்து வருகிறார். மனுதாரர்/2 வது எதிரி தினக்கூலி ஆவார். மேற்படி நிபந்தனையின் காரணமாக மனுதாரர்/2 வது எதிரியால் ஒழுங்காக வேலைக்கு செல்ல முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டு வருவதாகவும், மனுதாரர்/2 வது எதிரி மட்டுமே அவரது குடும்பத்தில் வருமானம் ஈட்டக் கூடிய நபர் என்றும் மனுதாரர்/2 வது எதிரி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்/2 வது எதிரியின் நிலைமையைக் கருத்தில்கொண்டு குற்ற பல்வகை மனு எண். 2236/2026 உள் அமர்வு

வழக்கு எண். 281/2025 மனுவில் கடந்த 4.5.2026ம் தேதி பிறப்பித்துள்ள உத்தரவில் கண்ட நிபந்தனையை முற்றிலுமாக தளர்வு செய்து உத்தரவிடலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, குற்ற பல்வகை மனு எண். 2236/2026 உள் அமர்வு வழக்கு எண். 281/2025 மனுவில் கடந்த 4.5.2026ம் தேதி பிறப்பித்துள்ள உத்தரவில் கண்ட அனைத்து நிபந்தனைகளையும் முற்றிலுமாக தளர்வு செய்து இம்மனு அனுமதிக்கப்படுகின்றது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தரிடம் சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M P MURUGAN Digitally signed by M P MURUGAN
Date: 2026.06.23 17:28:11 +0530

**அமர்வு நீதிபதி,**
**மகளிர் நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்),**
**தூத்துக்குடி.**

-----------------------------------
மகளிர் நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்)
தூத்துக்குடி
குற்ற பல்வகை மனு எண். 3138/2026
உள்
குற்ற பல்வகை மனு எண். 2236/2026
உள்
அமர்வு வழக்கு எண். 281/2025
நேரிய/வரைவு உத்தரவு
நாள். 23.6.2026
-----------------------------------